# பூஜாபிட்டிய பிரதேச சபை
# கண்டி மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆம் திகதியும், அதற்கு முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பூஜாபிட்டிய பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூஜாபிட்டிய பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான ரூபா 92,155 காசுமீதி ஐந்தொகையின் 08 ஆம் குறிப்பில் உத்தியோகத்தர்களிடமுள்ள பணத்தில் காட்டப்பட வேண்டுமாயினும், அவ்வாறு காட்டாமல் காசேட்டின் மீதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டாம் குடி நீர் விநியோகத்திட்டத்திற்கு மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,058,755 ஆன நிலுவை சபை பங்களிப்பிற்காக கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ஊழியர் பிணையாக வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 16,958 பெறுமதியான மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் கடன் மீதி ரூபா 554,674 ஆகவும், கடன் மூலதனத்தின் கீழ் ரூபா 241,604 ஆன தொகையை மட்டும் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால், அந்நிதியத்தின் கடன் மீதி ரூபா 313,070 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மேலதிகமாகச் செலுத்தப்பட்ட சம்பள அறவீடு 41 ஆம் இலக்க நாட்குறிப்புப் பதிவேட்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், வேறு வருமானக் கணக்கிற்கு ரூபா 12,512 வரவு வைக்கப்பட்டமையினால் வேறு வருமானம் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 581,827 ஆக இருந்ததுடன், பயன்படு பதிவேடுகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 512,824 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தைத் தாண்டிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 269,804 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

#### தகவல் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 37,782,123 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்தவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்று டனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | காணி கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு | ரூபா 272,945 பெறுமதியான 07 காணித்துண்டுகளின் உரிமை உறுதிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | <u>இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம்</u> | |
| | நி.பி 1645 | சபைக்குச் சொந்தமான 05 வாகனங்களுக்குரிய 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கு உரிய நாளாந்த ஓட்டப்பதிவேடுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | நிதி ஆணைக்குழுச் செயலாளரின் 2003 மார்ச் 06 ஆம் திகதிய ஏபீஸீ/1/பீஎஸ்ஜீடீ/ 2002 ஆம் இலக்கச் சுற்றரிக்கை | 03 சந்தர்ப்பங்களில் நிர்மாணங்களுக்கான நிர்வாக செலவினங்களில் ரூபா 225,250 தொகை வாகனப் பழுதுபார்த்தல்களுக்கும் பத்திரிகை விளம்பரத்திற்கும் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஈ) | மத்திய மாகாண பிரதான செயலாளரின் 2004 ஏப்ரல் 11 ஆம் திகதிய சீபீசீ/சீஎஸ்/06/06/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | பிணை வைக்க வேண்டிய 06 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 20,000 ஊழியர் பிணை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,321,905 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,109,674 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 1,130 | 1,129 | 759 | 1,019 | 1,163 | 615 |
| (ii) | வாடகை | 1,971 | 857 | 1,430 | 1,670 | 1,206 | 536 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 991 | 1,142 | 136 | 927 | 1,079 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 22,089 | 18,146 | 6,775 | 23,980 | 17,008 | 19,304 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் 02 நீதிவான் நீதிமன்றங்களினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 114,998 தண்டப்பணத் தொகை சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

முத்திரைக் கட்டணங்களாக 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 2,665,218 ஆன தொகை கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.4 வாடகை

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 03 குத்தகையாளார்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 141,503 பெறுமதியான வாடகைப் பணம் 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஒப்பந்தத்தின் பிரகாரம், அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மீண்டுவரும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனம் | 16,182 | 13,395 | 2,787 | 15,452 | 14,237 | 1,215 |
| ஏனையவை | 5,986 | 5,556 | 430 | 6,559 | 5,109 | 1,450 |
| உப மொத்தம் | 22,168 | 18,951 | 3,217 | 22,011 | 19,346 | 2,665 |
| மூலதனச் செலவினம் | 48,300 | 36,844 | 11,456 | 27,070 | 34,415 | (7,345) |
| மொத்தம் | 70,468 | 55,795 | 14,673 | 49,081 | 53,761 | (4,680) |

### 2.4 நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தாமை

2010 வருடாந்த பாதீட்டின் மூலம் 07 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 782,000 ஆன நிதிஏற்பாட்னை உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.5 மனித வள முகாமைத்துவம்

#### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (i) | பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| (ii) | இரண்டாம் நிலை | 24 | 18 |
| (iii) | ஆரம்ப நிலை | 22 | 18 |
| (iv) | வேறு(அமைய, தற்காலிக) | 01 | 19 |

### 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

#### 2.6.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 4,486 பெறுமதியான 115 மின் உபகரண அலகுகள் பயன்படுத்தப்படாமலும் குறைபயன்பாட்டுக்குட்பட்டும் காணப்பட்டன.

(ஆ) 2009 ஒக்தோபர் 23 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி இருந்த சபைக்குச் சொந்தமான 49-0253 ஆம் இலக்க வாகனம் கணக்காய்வு தினமான 2011 மே 10 ஆம் திகதி வரையில் செயற்பாடற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 2.6.2 பெறப்படவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்படவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,522,559 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 181,457 ஆக இருந்தது.

### 2.6.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 466,829 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,490 ஆக இருந்தது.

(ஆ) தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4:4 உபபிரிவின் பிரகாரம் இறந்த ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்தொகை அவர்களின் மரண இளைப்பாற்று நிதியிலிருந்தோ அல்லது பிணையாளர்களிடமிருந்தோ அறவிடப்பட வேண்டிய போதிலும், தற்போது இரண்டு வருடங்களுக்கு முன்னர் இறந்த சமயாசமய சாரதி ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 22,098 ஆன கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதிவரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 10:2 உபபிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அவர் வகித்த பதவிக்காக இடர் கடனொன்றை பெற்றுக்கொள்ள உரித்தொன்று காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 2.7 வாகன பாவனை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 அரசின் கேள்வி நடைமுறை தொடர்பான வழிகாட்டி கோவையின் 9:3:1 (பி) பந்தியின் அறிவுறுத்தலின் பிரகாரம் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட திருத்தங்கள் தொடர்பாக அமைச்சு செயலாளரின் முன்அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி ரூபா 180,250 செலவிடப்பட்டு சபை வசமிருந்த 252-6528 ஆம் இலக்க உழவு இயந்திரம் திருத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான சீபிபீஏ-7199 ஆம் இலக்க பெக்கோ இயந்திரத்திற்காக காப்புறுதி மேவுகை 2010 மார்ச் 17 ஆம் திகதி காலாவதியாக இருந்ததுடன், 2011 மே 10 ஆம் திகதி வரையில் எதிர்வரும் காலத்திற்கு காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.8 இனங்காணப்பட்ட நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தமையால் ரூபா 2,200 மிகை அறவீடு செலுத்த நேர்ந்திருந்தது.

(ஆ) வெலேகடே பொது மலசலகூடத்தின் நீர்ப்பட்டியலை உரியவாறு செலுத்தாத காரணத்தால் மீள் இணைப்புக் கட்டணமாக ரூபா 11,760 செலுத்தவேண்டியேற்பட்டது.

## 2.9 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132(ஏ) பிரிவின் பிரகாரம், பொது முக்கியத்துவம் வாய்ந்த நலன்புரி வசதிகளுக்காக ஒரு வருடத்திற்கு மொத்தம் ரூபா ஆயிரத்திற்கு மேற்படாத வகையில் நன்கொடை கொடுக்க முடியுமான போதிலும், உரிய அமைச்சரின் அங்கீகாரம் இன்றி ரூபா 77,176 செலுத்தப்பட்டிருந்தது.

## 2.10 செயற்பாட்டு வினைத்திறனின்மை

வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 நவெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 165,130 தொகை மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு

(உ) வாகனக் கட்டுப்பாடு